## பகுதி – I
## முதன்மை எழுத்து தேர்வு
## பிரிவு – அ : பொது அறிவு

1. இந்திய அரசமைப்பின் எந்த சட்டப்பிரிவு இந்திய அரசமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார் ?

(A) சட்டப்பிரிவு 21
(B) சட்டப்பிரிவு 45
(C) சட்டப்பிரிவு 32
(D) சட்டப்பிரிவு 35

2. முட்டைகள் அழுகும் போது _______ வாயு உருவாவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

(A) ஆக்ஸிஜன்
(B) ஹைட்ரஜன் சல்பைடு
(C) கார்பன்-டை-ஆக்சைடு
(D) சல்பர்-டை-ஆக்சைடு

3. வடுஆர் பறவைகள் சரணாலயம் உள்ள மாவட்டம் எது ?

(A) திருவாரூர்
(B) திருநெல்வேலி
(C) காஞ்சிபுரம்
(D) அரியலூர்

4. "AN UNCERTAIN GLORY" என்ற புத்தகத்தை எழுதியவர்

(A) ஜவஹர்லால் நேரு
(B) அமர்த்தியா சென்
(C) சுவாமி விவேகானந்தா
(D) Dr. A. P. J. அப்துல் கலாம்

5. இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்து இந்திய செல்வங்களை சூறையாடியவர் யார் ?

(A) கஜினி மாமூது
(B) முகமது கோரி
(C) செங்கிஸ்கான்
(D) தைமூர்

6. வாக்கியம் I : நமது இந்திய தேசிய கொடியில் உள்ள சக்கரத்தில் 40 ஆரங்கள் உள்ளது.
வாக்கியம் II : தேசிய கீதமானது 52 வினாடிகளில் பாடி முடிக்கப்பட வேண்டும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

7. தவறான இணையை கண்டறிக.

| இரத்த வகை | யாரிடமிருந்து இரத்தம் பெற முடியும் |
|---|---|
| I. A | a. A, O |
| II. B | b. B, O |
| III. AB | c. AB, O |
| IV. O | d. O மட்டும் |

(A) A – A, O (B) B – B, O (C) AB – AB, O (D) O – O மட்டும்

8. வாக்கியம் I : கௌதம புத்தரால் பௌத்த மதம் தோற்றுவிக்கப்பட்டது.

வாக்கியம் II : பௌத்த மதம் திகம்பரம் சுவேதம்பரம் என பிரிவுகளாக பிரிந்தது.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

9. எவ்வகை தாது தசைகளின் செயல்திறனை ஒழுங்குபடுத்துகின்றது ?

(A) கால்சியம் (B) பொட்டாசியம்

(C) சோடியம் (D) அயோடின்

10. அதிக எண்ணிக்கையிலான ________ இருப்பதால் சென்னை “ஆசியாவின் டெட்ராய்டு” என்று அழைக்கப்படுகிறது.

(A) வாகன தொழிற்சாலைகள்

(B) மென்பொருள் நிறுவனங்கள்

(C) கணினி வன்பொருள் நிறுவனங்கள்

(D) ஆயத்த ஆடை நிறுவனங்கள்

11. வாக்கியம் I : பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவதையும் குறிக்கும்.

வாக்கியம் II : பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

12. பொருத்துக.

I. பாஸ்பரஸ் — a. மின்விளக்கிற்கான இழைகள்

II. டங்ஸ்டன் — b. தீப்பெட்டிகள் தயாரித்தல்

III. கிராஃபைட் — c. இராக்கெட் எரிபொருள் பற்ற வைப்பான்

IV. போரான் — d. பென்சில்கள் தயாரித்தல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | d | a |
| (B) | b | a | c | d |
| (C) | b | a | d | c |
| (D) | d | c | b | a |

13. பொருத்துக.

I. பாலாறு — a. பச்சையாறு

II. காவிரி — b. சின்னாறு

III. தாமிரபரணி — c. பவானி

IV. தென் பெண்ணையாறு — d. கிளியாறு

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | a | d |
| (B) | d | c | a | b |
| (C) | b | a | d | c |
| (D) | d | c | b | a |

14. பொருத்துக.

I. INS விக்ராந்த் — a. போர் விமானம்

II. தேஜஸ் — b. விமானம் தாங்கி

III. GSLV — c. ராக்கெட் ஏவுதல் வாகனம்

IV. வந்தே பாரத் — d. அரை அதிவேக ரயில்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | a | b | c | d |
| (B) | b | a | c | d |
| (C) | c | a | b | d |
| (D) | a | c | d | b |

15. கீழ் உள்ளவற்றுள் எது/எவை புதை வடிவ பொருட்கள் ?

(A) தார்

(B) தார் மற்றும் நிலக்கரி

(C) நிலக்கரி மற்றும் பெட்ரோலியம்

(D) பெட்ரோலியம் மற்றும் அணுக்கரு கனிமங்கள்

16. வாக்கியம் I : நமது சூரியக்குடும்பமானது, பால்வெளி விண்மீன் திரள் மண்டலத்தின் ஒரு பகுதி ஆகும்.

வாக்கியம் II : நமது சூரியக் குடும்பத்தில் 8 கோள்கள் உள்ளன.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

17. வாக்கியம் I : புவி தன் அச்சில் தன்னைத் தானே ஒருமுறை சுற்றி வருவதற்கு 24 மணிநேரம் எடுத்துக் கொள்கிறது. இதன் காரணமாக பகல், இரவு ஏற்படுகிறது.

வாக்கியம் II : "லீப் வருடம்" இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது.

(A) I மட்டும் சரி

(B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி

(D) I மற்றும் II தவறு

18. தலைநகரை டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு மாற்றியவர் யார் ?

(A) முகமது பின் துக்ளக்

(B) அலாவுதீன் கில்ஜி

(C) பால்பன்

(D) இல்துத்மிஷ்

19. பின்வருவனவற்றுள் எது வேர் அல்ல ?

(A) உருளைக்கிழங்கு (B) கேரட்

(C) பீட்ரூட் (D) முள்ளங்கி

20. இந்தியாவில் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்ட அலைக்கற்றை

(A) 2-ஜி (B) 3-ஜி (C) 4-ஜி (D) 5-ஜி

21. எந்த டெல்லி சுல்தான் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார் ?

(A) முகம்மது பின் துக்ளக் (B) அலாவுதீன் கில்ஜி

(C) ஃபெரோஷ் ஷா துக்ளக் (D) பால்பன்

22. வாக்கியம் I : யானை தமிழ்நாட்டின் மாநில விலங்கு.

வாக்கியம் II : பனைமரம் தமிழ்நாட்டின் மாநில மரம்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

23. வாக்கியம் I : ஒளியின் திசைவேகம் ஒலியின் திசைவேகத்தை விட குறைவு என். இடிச் சத்தம் கேட்பதற்கு முன்னரே மின்னல் நம் கண்களுக்கு தெ

வாக்கியம் II : உயரமான கட்டடங்களை மின்னல் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உத கருவி மின்னல் கடத்தி ஆகும்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

24. 1857 ஆம் ஆண்டு புரட்சி நடைபெற்றபோது முகலாய மன்னராக பதவி வகித்தவ

(A) அக்பர்

(B) ஔரங்கசீப்

(C) இரண்டாம் பகதூர்ஷா

(D) நானா சாகிப்

25. தவறான இணையை கண்டறிக.

| | |
|---|---|
| I. பொதுத்துறை | a. சேவை நோக்கம் |
| II. தனியார் துறை | b. இலாப நோக்கம் |
| III. முதன்மைத்துறை | c. கோழி வளர்ப்பு |
| IV. மூன்றாம் துறை | d. தொழிற்சாலைகள் |

(A) பொதுத்துறை – சேவை நோக்கம்

(B) மூன்றாம் துறை – தொழிற்சாலைகள்

(C) முதன்மைத்துறை – கோழி வளர்ப்பு

(D) தனியார் துறை – இலாப நோக்கம்

26. தாஜ்மஹால் __________ நதிக்கரையில் அமைந்துள்ளது.

(A) காவிரி (B) யமுனா

(C) கோதாவரி (D) கங்கை

27. எந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 'NOTA' அறிமுகப்படுத்தப்பட்டது ?

(A) 2002 (B) 2005

(C) 2014 (D) 2017

28. கோடைப் பருவத்தில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் வீசும் உள்ளூர் தலக்காற்றின் பெயர்

(A) நார்வெஸ்டர்ஸ் (B) 'லூ'

(C) மாஞ்சாரல் (D) பருவக்காற்று

29. சிம்கார்டு, ஏ.டி.எம். கார்டுகள் _______ என்ற குறைகடத்தியால் ஆக்கப்பட்டிருக்கும்.

(A) சிலிகான் (B) இரும்பு

(C) அலுமினியம் (D) காப்பர்

30. இங்கிலாந்து நாட்டின் தற்போதைய மன்னர் யார் ?

(A) இளவரசி எலிசபெத் II (B) ஜார்ஜ் மன்னர்

(C) மன்னர் மூன்றாம் சார்லஸ் (D) இராணி விக்டோரியா

31. 'பிரிதிவிராஜ் ராசோ' எனும் காவியத்தை இயற்றியவர் ?

(A) சந்த் பார்தை
(B) பிரிதிவிராஜ் சௌகான்
(C) காளிதாஸ்
(D) அமீர் குஸ்ரூ

32. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சியைக் குறிக்கிறது

(A) தொண்டைக்குழி
(B) தைராய்டு
(C) குரல்வளை
(D) பாராதைராய்டு

33. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| I. | இமயமலைத் தொடர் | a. | வட அமெரிக்கா |
| II. | ராக்கி மலைத் தொடர் | b. | தென் அமெரிக்கா |
| III. | ஆல்ப்ஸ் மலைத் தொடர் | c. | ஐரோப்பா |
| IV. | ஆண்டிஸ் மலைத் தொடர் | d. | ஆசியா |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | c | d | a |
| (B) | c | d | a | b |
| (C) | d | b | a | c |
| (D) | d | a | c | b |

34. வாக்கியம் I : குதுப்மினார் குத்புதீன் ஐபக்கால் தொடங்கப்பட்டு இல்துமிஷால் கட்டி முடிக்கப்பட்டது.

வாக்கியம் II : குதுப்மினார் ஹைதராபாத்தில் உள்ளது.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

35. இந்தியாவின் தேசிய மரம்

(A) ஆலமரம்
(B) அரச மரம்
(C) வேப்ப மரம்
(D) மாமரம்

36. இந்தியாவின் குறுக்கே செல்லும் சிறப்பு அட்சம் எது ?

(A) கடகரேகை
(B) மகரரேகை
(C) புவிநடுக்கோடு
(D) துருவ வட்டம்

37. விஜய நகர பேரரசிற்கு வந்த இத்தாலியப் பயணி

(A) மார்கோபோலோ
(B) நிக்கோலோ கோண்டி
(C) டோமிங்கோ
(D) பாகியான்

38. பொருத்துக.

I. காற்றழுத்தமானி — a. பாலின் தூய்மை
II. நீரியல் அழுத்தி — b. சர்க்கரையின் அடர்த்தி
III. பால்மானி — c. வளிமண்டல அழுத்தம்
IV. சர்க்கரைமானி — d. பாஸ்கல் விதி

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | a | d | b |
| (B) | c | d | a | b |
| (C) | d | c | b | a |
| (D) | b | c | d | a |

39. பொருத்துக.

I. மொகஞ்ச-தாரோ — a. கல்வி நகரம்
II. லோத்தல் — b. வணிக நகரம்
III. மதுரை — c. பெருங்குளம்
IV. காஞ்சி — d. கப்பல் கட்டும் தளம்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | c | d | a | b |
| (C) | b | a | c | d |
| (D) | c | d | b | a |

40. வாக்கியம் I : வெவ்வேறு அளவுள்ள திடப்பொருளை பிரிப்பது சலித்தல் எனப்படும்.
வாக்கியம் II : வெவ்வேறு எடையுள்ள திடப்பொருளை பிரிப்பது தூற்றுதல் எனப்படும்.

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் II தவறு

41. புவியில் காணப்படும் நீரில், ________ நீரானது கடல்களிலும், பெருங்கடல்களிலும் காணப்படுகிறது.

(A) 50% (B) 75% (C) 97% (D) 60%

42. மஞ்சள் காமாலையால் (ஹெப்படைடிஸ் பி வைரஸ்) பாதிக்கப்படும் உறுப்பு எது ?

(A) கல்லீரல் (B) நுரையீரல் (C) சிறுநீரகம் (D) மூளை

43. வாக்கியம் I : நெட்பிளிக்ஸ், ஹாட்ஸ்டார், அமேசான் பிரைம் என்பவை பிரபலமான OTT தளங்கள்.

வாக்கியம் II : OTT என்பதன் விரிவாக்கம் "Over The Top"

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

44. தவறான இணையை கண்டறிக.

| பதவி | குறைந்த பட்ச வயது |
|---|---|
| I. குடியரசுத் தலைவர் | a. 35 வயது |
| II. ராஜ்யசபா உறுப்பினர் | b. 30 வயது |
| III. லோக்சபா உறுப்பினர் | c. 21 வயது |
| IV. சட்ட மேலவை உறுப்பினர் | d. 30 வயது |

(A) குடியரசுத் தலைவர் வயது – 35 வயது

(B) ராஜ்ய சபா உறுப்பினர் – 30 வயது

(C) லோக்சபா உறுப்பினர் – 21 வயது

(D) சட்ட மேலவை உறுப்பினர் – 30 வயது

45. பொருத்துக.

| | |
|---|---|
| I. பண்டையக் கால கல்விமுறை | a. RTE – 2009 |
| II. வார்தா கல்வித் திட்டம் | b. 1992 |
| III. கட்டாயக் கல்வி சட்ட விதி | c. குருகுலக் கல்வி முறை |
| IV. புதிய கல்விக் கொள்கை திருத்தம் | d. காந்தியடிகள் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | c | b | d | a |
| (B) | a | d | c | b |
| (C) | c | d | a | b |
| (D) | c | d | b | a |

## பிரிவு – ஆ : உளவியல்

46. ‘அம்மா பசிக்குது, எனக்குச் சோறு வேணும்’ – இத்தொடரில் உள்ள பேச்சு வழக்குச் சொற்களுக்குச் சரியான எழுத்து வழக்குச் சொற்களைத் தேர்வு செய்க.

(A) அம்மா பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்

(B) அம்மா பசிக்குது. எனக்குச் சோறு வேண்டும்

(C) அம்மா பசிக்கிறது. எனக்குச் சோறு வேணும்

(D) அம்மா பசிக்கிறது. என்கு சோறு வேணும்

47. ஒரு வாத்து இரு வாத்துகளுக்கு முன்னால் உள்ளது. ஒரு வாத்து இரு வாத்துகளுக்கு பின்னால் உள்ளது. ஒரு வாத்து மத்தியில் உள்ளது. அங்கு எத்தனை வாத்துகள் உள்ளன ?

(A) 5 (B) 3 (C) 7 (D) 4

48. 40 மாணவர்கள் உள்ள ஒரு வரிசையில், மணி என்பவர் வலமிருந்து 14 வது நிலையில் இருக்கிறார். இடமிருந்து அவரது நிலை என்ன ?

(A) 24th (B) 25th (C) 26th (D) 27th

49. ராமின் வீடு கிருஷ்ணனின் வீட்டிலிருந்து தெற்கு நோக்கி உள்ளது. கோவிந்தாவின் வீடு கிருஷ்ணனின் வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி அமைந்திருந்தால். ராமின் வீடு கோவிந்தாவின் வீட்டிலிருந்து எந்த திசையில் அமைந்துள்ளது ?

(A) வட கிழக்கு (B) வட மேற்கு (C) தென் கிழக்கு (D) தென் மேற்கு

50. ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு மடங்காகும் போது அதனுடைய பரப்பளவு ____________ மடங்காகும்.

(A) 2 (B) 3 (C) 4 (D) 6

51. கரகாட்டத்தை கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?

(A) கரகாட்டம் என்றால் என்ன ?

(B) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை ?

(C) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?

(D) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?

52. சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களுக்கு இடையே உள்ள கோணம்

(A) 120° (B) 180° (C) 90° (D) 100°

53. i) ரமா என்பவர் ராணியை விட அதிக மதிப்பெண்கள் எழுத்துள்ளார்.
ii) ராணி என்பவர், ரத்னாவை விட குறைவான மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.
iii) ரத்னா, ரமாவை விட அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.
iv) பத்மா என்பவர் ரமாவை விட அதிக மதிப்பெண்களும், ரத்னாவை விட குறைவான மதிப்பெண்களும் பெற்றுள்ளார்.


இதில் யார் மிக அதிக மதிப்பெண் பெற்றுள்ளார் ?

(A) ரமா (B) பத்மா (C) ராணி (D) ரத்னா

54. "இரவியின் அம்மா என்னுடைய அம்மாவுக்கு ஒரே மகள்" என்று கமல் சொன்னால், கமல் இரவிக்கு என்ன உறவு ?

(A) தாத்தா (B) அப்பா
(C) சகோதரர் (D) தாய்மாமன்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பை விளக்கப்படத்தை படித்து, பின்வரும் 55-57 கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.




55. எந்த சங்கத்திலும் உறுப்பினர் இல்லாதவரின் சதவீதம் என்ன ?

(A) 5%
(B) 8%
(C) 10%
(D) 6%

56. கிரிக்கெட் விளையாட்டு சங்கத்தினர் மட்டுமே, மற்றும் கால்பந்து சங்கத்தினர் மட்டுமே ஆகியோரின் பங்கீடு என்ன ?

(A) 1 : 3

(B) 2 : 1

(C) 1 : 2

(D) 3: 1

57. கிரிக்கெட் மற்றும் கால்பந்து சங்கங்களின் உறுப்பினர்களான மாணாக்கர்கள் எத்தனை ?


(A) 500

(B) 650

(C) 550

(D) 600

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டை விளக்கப்படம், 2021 இல் பல மாநிலத்தின் அரிசி மற்றும் கோதுமையின் உற்பத்தி அளவை குறிக்கிறது. விளக்கப்படத்தை படித்து, பின்வரும் 58-59 கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.




58. அரிசி மற்றும் கோதுமை மொத்த உற்பத்தி அளவு எந்த மாநிலத்தில் குறைவாக உள்ளது ?

(A) B (B) C (C) D (D) E

59. எந்த மாநிலத்தில் அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளது ?

(A) A (B) B (C) C (D) D

60. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.

(A) இரட்டைக் காப்பியங்கள் யாவை ?

(B) இரட்டைக் காப்பியங்கள் என்றால் என்ன ?

(C) சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர் யாது ?

(D) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இலக்கண நூல்களா ?

61. கீழ்க்கண்ட தொடர்களில் சரியான தொடரைக் தேர்ந்தெடுக்க

(A) வாலைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது

(B) வாழைப்பலம் உடளுக்கு மிகவும் நல்லது


(C) வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது


(D) வாளைப்பழம் உடலுக்கு மிகவும் நள்ளது

62. வேறுபட்டு இருப்பதை தேர்ந்தெடுத்து எழுதுக

(A) நாற்காலி (B) மேசை (C) ரேடியோ (D) அல்மிரா

63. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் விடுபட்ட எண்ணை தேர்வு செய்யவும்




(A) 27 (B) 35 (C) 54 (D) 64

64. இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு

(A) $\frac{1}{2}$ (B) $\frac{3}{2}$ (C) 2 (D) 1


65. பொருத்துக.


| | | | |
|---|---|---|---|
| I. | விற்பனை விலை | a. | அடக்கவிலை – விற்பனை விலை |
| II. | நட்டம் | b. | விற்பனை விலை – அடக்க விலை |
| III. | இலாபம் | c. | வாங்கிய விலை + கூடுதல் செலவுகள் |
| IV. | அடக்க விலை | d. | குறித்த விலை – தள்ளுபடி |


| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | a | b | c |
| (B) | a | b | c | d |
| (C) | d | b | a | c |
| (D) | b | a | c | d |


66. எந்த வெண்வரைபடம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுக்குள் இருக்கும் தொடர்பை சரியாக குறிக்கிறது ?

வினாடி, நிமிடம், மணிநேரம்

(A) 

(B) 

(C) 

(D) 

67. பின்வரும் சொற்தொடர்களில் தகுந்த இணையான சொல்லைக் கண்டுப்பிடித்து விடையளிக்கவும்

மனிதன் : நடப்பது :: மீன் : ?

(A) நீந்துதல் (B) சாப்பிடுதல் (C) ஓடுதல் (D) பறப்பது

68. 'புயல்' – என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் எது ?

(A) TEMPEST (B) LAND BREEZE (C) TORNADO (D) STORM

69. வாக்கியம் I : 2018 ஆம் ஆண்டு லீப் ஆண்டு.

வாக்கியம் II : 400 ஆல் வகுபடும் நூற்றாண்டுகள் லீப் ஆண்டுகள் ஆகும்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

70. 'D A R K' என்பதன் குறியீடு E B S L எனில் 'B A C K' என்பதன் குறியீடு எது ?

(A) D B E M (B) C B D L (C) C B E L (D) C B D M